பக்கங்கள் - 07

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

மின்னிதழ்

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005
இல.44,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
கட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 15 சனிக்கிழமை (29.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 161

## நல்லூர் அரசடிப் பகுதி மறுஅறிவித்தல்வரை முடக்கம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் அரசடி பகுதி தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நேற்று மாலை முதல் மறு அறிவித்தல்வரை முடக்கப்பட்டுள்ளது.

நல்லூர் அரசடியில் கடந்த ஒரு வாரத்தில் 22 கொரோனாத் தொற்ற 02

### யாழ்.கொக்குவிலில்

## 5 வயது சிறுமி கொரோனாவுக்கு பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவிலைச் சேர்ந்த 5 வயது சிறுமி ஒருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் கோவிட் சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த சிறு 02

### எழுமாற்று பரிசோதனை

## வவுனியாவில் நீதவானுக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதிக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 02

### நாகர்கோவிலில்

## முன்னாள் போராளி

### படையினரால் கைது

(யாழ்ப்பாணம்)

வெடிகுண்டு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் நாகர் கோவில் பகுதி 02

ஜூன் 7 வரை

# நாடு முழுவதும் முழுநேர பயணத் தடை

## மே 31, ஜூன் 4இல் தளர்வுகள் இல்லை

### ஜனாதிபதி கோட்டா அறிவிப்பு



**(கொழும்பு)**

**நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ள முழுநேர பயணத் தடை ஜூன் மாதம் 7ஆம் திகதிவரை தளர்வின்றித் தொடரும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

**முன்னர் அறிவித்தது போன்று மே 31 மற்றும் ஜூன் 4ஆம் திகதிகளில் பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

கோவிட் தடுப்பு விசேட குழு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் கூடிய சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி இத்தீர்மானத்தை எடுத்துள்ளார்.

பயணத் தடையின் காரணமாக 02

### கிளிநொச்சி மாவட்டத்தில்

## 64 கடந்த இரு நாட்களில் பேருக்கு தொற்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் வெளிவந்த பிசிஆர் முடிவுகளின்படி 64 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி ஆடைத் தொழிற் 02

### யாழில் சிறுமிகள், இளைஞர்கள் உட்பட

## 47 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

சிறுமிகள், இளைஞர்கள் உட்பட 47 பேருக்கு யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 19 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலையின் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை 02

### யாழ்.மாவட்ட மக்களுக்கான

## கொரோனா தடுப்பூசிகள் வழங்கும் திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட மக்களுக்கு கோவிட் - 19 தடுப்பூசிகள் வழங்கும் திட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாதன் 02

## கொரோனா 38 பலி +2,850 தொற்றாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் 02

### பயணத் தடைக் காலத்தில்

## நடமாடும் விற்பனை சேவைகள் இடம்பெறும்

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பயணத் தடை ஜூன் 7 வரை நீடிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய வசதியாக 02

## வவுனியாவில்...

எழுமாறான வகையில் அவருக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் பிசிஆர் முடிவுகள் வெளியாகியிருந்தது.

அதில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,299)

## முன்னாள்...

யில் முன்னாள் போராளி ஒருவர் நேற்றுக் காலை படைத் தரப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு இராணுவத்தினரை தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்டு தலைமறைவாகிய நிலையில் குடும்பத்தாரால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றின் ஊடாக விடுதலையான முன்னாள் போராளியே நேற்று கைதாகியுள்ளார்.

அவருடைய மீன்பிடி வாடியில் பொதி ஒன்றில் ஆயுதங்களை மீட்டிருப்பதாக தெரிவித்த பின்னரே படையினர் அவரைக் கைது செய்திருப்பதாக முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவருடைய கைது நாகர்கோவிலில் உள்ள அவருடைய வீட்டிலேயே இடம்பெற்றிருக்கின்றது.

விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-3,18,33,60,316)

## 5 வயது சிறுமி...

மியே உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுமி கடந்த 26ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமியின் பிரேத பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த 5 வயதுடைய சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-3)

## கடந்த இரு நாட்...

சாலை, அறிவியல் நகரில் உள்ள பழச்சாறு உற்பத்தி நிறுவனம் மற்றும் சாந்தபுரம் கிராமம் என்பவற்றில் அதிக தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

நாளுக்கு நாள் தொற்று அதிகரித்துச் செல்கின்றமையால் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்றி நோய் பரவுவதனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர சுகாதார பிரிவினருக்கு உதவ வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (ம-3,316)

## கொரோனா தடுப்...

காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 16 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் கிராம அலுவலக பிரிவு ரீதியில் கோவிட் - 19 தடுப்பூசி மருந்து வழங்கும் பணி முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவிட் - 19 நோய்த் தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்படும் இடங்களுக்கு தடுப்பூசி மருந்து வழங்கல் முன்னுரிமையளிக்கப்படும் என்றும் பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாதன் காசிலிங்கம் தெரிவித்துள்ளார். (ம-3)

## நல்லூர் அரசடி...

ளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அதனால் அரசடியில் வதியும் மக்களை சுயதனிமைப்படுத்துவதுடன் அந்தப் பகுதியை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நல்லூர் ஜே 103 கிராம அலுவலர் பிரிவில் ஒரு பகுதியான அரசடியை தனிமைப்படுத்துவதற்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்டச் செயலாளர் ஊடாக கோவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தும் செயலணிக்கு யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியினால் நேற்றுக் காலை கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கு அமைவாக நேற்று மாலை 6 மணி முதல் அரசடிப் பகுதியைத் தனிமைப்படுத்த சுகாதார மருத்துவ அதிகாரிக்கு அனுமதியளிக்கப்பட்டது. (ம-3,33)

## பயணத் தடை...

பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாமல் இருப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட மூன்று நாட்களுக்கு பயணத் தடையை தளர்த்துவதற்கு ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் கடந்த 25ஆம் திகதி அதிகாலை 4.00 மணிக்கு பயணத் தடை தளர்த்தப்பட்டவேளையில் பொது மக்கள் செயற்பட்ட விதம் நோய்த் தொற்று மேலும் பரவுவதற்கு இடமளித்ததைப் போன்றதாகும்.

எனவே நோய்த்தொற்று பரவுவதை தடுப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் இதன்மூலம் தோல்வியடையக் கூடுமென்று ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

அதன்படி மே மாதம் 31ஆம் திகதி மற்றும் ஜூன் மாதம் 04ஆம் திகதி என்ற இரு தினங்களில் பயணத் தடையை தளர்த்துவதற்கு எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தை இடைநிறுத்துவதற்கும் எதிர்வரும் நாட்களில் பொது மக்களுக்கு அவசியமான பொருட்களை நடமாடும் விற்பனை சேவையின் மூலம் விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

பயணத் தடை அமுலில் உள்ள காலங்களில் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் வீட்டிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதி உண்டு. வீதிகளில் பயணிக்கும்போது தொழில் புரியும் இடங்களினால் வழங்கப்பட்டுள்ள கடிதம் மற்றும் தொழில் அடையாள அட்டையை கைவசம் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

கோவிட் தொற்று பரவுவதை தடுப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு பொதுமக்களும் பொறுப்புடன் ஒத்துழைக்க வேண்டுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-3)

## 38 பலி...

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 38 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 1,363 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2,850 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 177,711 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## யாழில் 47 பேரு...

யிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில், 11 வயதுடைய சிறுமி, 14 வயதுடைய சிறுமிகள் 2 பேர், 19 வயதுடைய இளைஞர் ஒருவர், 20 வயதுடைய இளைஞர்கள் 5 பேர், 21 வயதுடைய யுவதி ஒருவர், 24 வயதுடைய இளைஞர் ஒருவர் உட்பட்ட 19 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

இதேவேளை, நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் 12 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆறு பேரும் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

அதேவேளை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3,18)

## நடமாடும்...

நடமாடும் சேவைகளை முன்னெடுக்குமாறு பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். (ம-3)


**ஐயாவின் 70ஆவது பிறந்த தினமும் 30 வருட ஆன்மீகப் போராட்டமும்...**

**இன்னும் தமிழினம் பார்த்துக் கொண்டிருந்தால் என்னாவது? பொழுது விடியப் போகின்றது. சேவல் கூவப் போகின்றது. எழுந்திடு தமிழா! தமிழா எழுந்திடு!! தமிழன் விடுதலை விடியல் தெரியுதுதானே தமிழா எழுந்திடு! எழுந்திடு! தமிழா!!**

என்றுதானே 15.01.2021 வலம்புரிப் பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தேன். இதனைத் திரும்ப திரும்ப வாசித்துப் பாருங்கள். ஈசுர விநாயகரின் திருவிளையாடல்களைப் பார்த்தீர்கள்தானே. என்ன ஆச்சரியம்! பொத்துவிலிருந்து பொலிகண்டி வரையிலான விடுதலைச் செயற்பாடு தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைத்தது மட்டுமன்றி விடுதலை அரசியலின் முக்கியத்துவத்தை அதிர்ச்சி தரும் வகையில் புரிய வைத்த மாபெரும் எழுச்சிப் போராட்ட நிகழ்வாக வரலாற்றிலே பதிவாகியுள்ளதை யாவரும் அறிவீர்களல்லவா! ஈசுர விநாயகரின் தெய்வீக சக்தி வெளிப்படுத்தியதையும் பின்னர் தன்னைக் காட்டுவதையும் அதனைத் தொடர்ந்து தன்மயப்படுத்துவதையும் எல்லோருக்கும் புரியவைக்கின்றது என்பதை உணர்வோமாக. "மனித சக்தியை ஆட்டிப் படைப்பது தெய்வீக சக்தி" எழுந்திடும் நினைவிலெல்லாம் நிறைந்தவன் இறைவனம்மா. எழுதிடும் எழுத்திலெல்லாம் கலந்தவன் - கடவுளம்மா. அந்த விளம்பரத்திலே பங்குனி மாதம் தமிழருக்குச் சாதகமான மாதம் எனக் கூறியிருந்தேன்.... அது எப்படி? ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரின் பங்குனி 23 இறுதி நாளன்று 46/1 தீர்மானம் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டது. ஜெனிவாவைப் புறந்தள்ளி கருத்து முரண்பட்டுக் கொண்டிருந்த இலங்கை அரசை ஈசுர விநாயகரே சர்வதேசத்தின் தொடர்ச்சியான கண்காணிப்பு வலயத்திற்குள்ளே இழுத்துச்சென்று 46/1 என்ற மந்திரத்தால் வாய் பூட்டையும் போட்டுவிட்டார் என்றே கூறவேண்டும். இதன் பெறுபேறு குறித்து பலரும் பலவாறாகக் கூறினாலும் ஈசுர விநாயகர் தமிழருக்குச் சாதகமாக்கியே தீருவார். அவரின் கருணையை எப்படிக் கூறுவேன்? தெய்வத் தண்டனையிலிருந்து எவரும் தப்பவே முடியாது. தெய்வீகத்தின் தொழிற்பாடு யாது? தெய்வம் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக நாயையும் எழுப்பும் முயலையும் எழுப்பும் என்பார்கள். எனவே ஈசுர விநாயகர் ஒருவரே நாட்டையும் சிங்களத் தரப்பையும் தமிழர் தரப்பையும் வழிநடத்திச் செல்கின்றார் என்பதை உணர்வோமாக.



பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவோர் :
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், ஈசுரவிநாயகர் அடியார்கள்.**

(6930)

**சோழியூரான் - பிறைசூடிக்குரு**
**(ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும்)**

அறிவினால் தவிர்க்க முடியாத ஒரு செயல் தாமதத்தால் நல்ல பலனை அளிக்கும் விதத்தில் முடிகின்றது.
– *செனேக்கா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனா கிருமியின் மூலத்தைக் கண்டறிக!

2019ஆம்ஆண்டின் இறுதிப் பகுதியில் சீனாவில் பரவிய கோவிட் (Covid - 19) கொரோனாத் தொற்று உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கின்றது.

மனித குலம் ஒருபோதும் அனுபவித்திராத பேரவலத்தை கொரோனாத் தொற்று ஏற்படுத்திவிட்டது.

இலட்சக்கணக்கான மக்களைக் காவு கொண்ட கொரோனாத் தொற்று இன்னமும் நின்றபாடில்லை.

இதற்கு மேலாக, கொரோனாக் கிருமி வலிமை பெற்று வருவதையே காண முடிகின்றது.

இவை ஒருபுறமிருக்க, சீனாவில் கொரோனாத் தொற்று பரவியபோது கோவிட் – 19 சீனாவின் உற்பத்தி என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக எழுந்தன.

அதாவது கொரோனாக் கிருமி என்பது சீனா வைத்திருந்த யுத்தகால ஆயுதம் என்றும் அது ஏதோவொரு வகையில் ஆய்வுகூடத்தினின்றும் வெளியேறிவிட்டது என்றும் அதுவே இத்துணை மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தி வருகிறதென்றும் கூறப்பட்டது.

இதனை ஆதாரப்படுத்தும் வகையில், நோபல் பரிசு பெற்ற பேராசிரியர்கள் இது ஒரு செயற்கைக் கிருமி எனக் கருத்துரைத்தனர்.

தவிர, கோவிட் – 19 தொடர்பில் சில உண்மைகளை வெளியிட்ட சீன தேசத்து ஊடகவியலாளர்களுக்கு என்ன நடந்ததென்பதே தெரியாது என்றும் இதில் மருத்துவர் ஒருவரும் அடங்குவார் என்பதும் ஊடகங்களில் வெளிவந்த தகவல்களாக உள்ளன.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாத் தொற்று உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கும் வேளையில் குறித்த கிருமி சீனாவின் உற்பத்தியா? என்பது பற்றியெல்லாம் ஆராய்வதற்கு எவருக்கும் நேரம் கிடையா.

மாறாக தொற்றைத் தடுப்பதற்கான மருந்துகளைக் கண்டறிந்து மனித குலத்தைக் காப்பாற்றியாக வேண்டும் என்பதுதான் உலக நாடுகளின் ஒரே சிந்தனையாக இருந்தது.

அந்தச் சிந்தனை கணிசமான வெற்றியையும் தந்தது எனலாம்.

ஆம், கொரோனாத் தொற்றுக்கு ஆளான உலக நாடுகள் கொரோனாத் தடை மருந்தேற்றலில் அதிதீவிரம் காட்டின.

அதனால் ஓரளவுக்கு மக்களைப் பாதுகாக்க முடிந்தது.

இருந்தும் இந்திய தேசம் கொரோனாத் தடை மருந்தைக் கண்டறிந்ததாயினும் அதனைத் தன் நாட்டு மக்களுக்கு பயன்படுத்துவது பற்றிக் கரிசனை கொள்ளாத காரணத்தால், அங்கு மனிதப் பேரவலம் நடந்தவண்ணமுள்ளது.

அதேநேரம் கொரோனாத் தொற்று முதன் முதலில் ஏற்பட்ட சீன தேசம் அதற்குரிய தடை மருந்தைக் கண்டறிந்து தனது நாட்டு மக்களுக்கு அதனைப் பயன்படுத்திக் கொண்டதுடன் அதில் வெற்றியும் கண்டது.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், அமெரிக்கா தனது நாட்டு மக்கள் அனைவருக்கும் கொரோனாத் தடை மருந்தை ஏற்றியதன் மூலம் சற்று ஆறுதல் கண்டுள்ளது.

இந்நேரத்தில்தான் கொரோனாத் தொற்றுக்குரிய மூலகாரணம் என்ன? அது எங்கிருந்து உற்பவம் ஆகியது என்ற விபரங்களைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ளது.

உண்மையில் கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாத்தல் என்ற பெரும் பணியைச் செய்கின்ற அதேநேரம், கோவிட் – 19 பற்றிய ஆய்வும் அது சீனாவின் துரோகத்தனமா? என்பது பற்றிய உண்மைத் தன்மைகளையும் கண்டறிவது மிக மிக அவசியமானதாகும்.

# விமான நிலையங்கள் திறந்தாலும் உள்ளக சேவைகள் இடம்பெறாது

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாடளாவிய முடக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் ஜுன் மாதம் முதலாம் திகதியில் இருந்து கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள விமான நிலையம் ஆகியவற்றைத் திறக்க அரசு தீர்மானித்துள்ளது.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களை வழமை போன்று சுகாதார விதிமுறைகளுக்கு அமைய நாட்டுக்கு வரவழைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாம் அலை காரணமாக நாடளாவிய ரீதியிலான பயண முடக்கத்தை அரசு அறிவித்துள்ள அதே நேரத்தில் கடந்த 21ஆம் திகதியில் இருந்து விமான சேவைகளை முடக்குவதாகவும் அரசு தெரிவித்திருந்தது.

இந்நிலையில், தொடர்ச்சியாக இரண்டு வார காலமாக விமான நிலையங்கள் இரண்டும் முடக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் ஜுன் மாதம் முதலாம் திகதியில் இருந்து விமான நிலையங்களை வழமையான சேவைகளுக்காகத் திறக்கவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“விமான நிலையங்கள் திறந்தாலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தற்போது இலங்கைக்கு வர முடியாது. வெளி நாடுகளில் பணிபுரியும், தங்கியுள்ள இலங்கையர்கள் மீண்டும் இலங்கைக்கு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிவோர் பலர் தாம் மீண்டும் நாட்டுக்கு வரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். எனவே, அதற்கமைய விமான சேவைகள் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

எனினும் இலங்கைக்கு வருவோருக்கான தனிமைப்படுத்தல் விதிமுறைகளில் எந்தவித மாற்றமும் இல்லை.

வெளிநாடுகளில் இருந்து வருவோர் கண்டிப்பாக 21 நாட்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள விமான நிலையம் ஆகியன ஜுன் மாதம் முதலாம் திகதி திறக்கப்பட்டாலும் பலாலி, இரத்மலானை உள்ளக விமான நிலையங்களை தற்போது இயக்க தாம் தயாராக இல்லை” என்றார். (ம-3)

# யாழில் கொரோனா சற்று அதிகரிப்பு

## அரச அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனா நிலைமை சற்று அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது என யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார். நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று (நேற்று முன்தினம்) இரவு கிடைத்த பிசிஆர் பரிசோதனையின்படி யாழில் 27 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்தில் நேற்றுவரை தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 2,729 ஆக காணப்படுகின்றது. தற்போதுவரை 36 மரணங்கள் பதிவாகியுள்ளன.

2,526 குடும்பங்களைச் சேர்ந்த 6,331 நபர்கள் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்கள். இந்த நிலையிலே யாழ். மாவட்டத்தில் மொத்தமாக நான்கு கிராம ங்களை தனிமைப்படுத்தலுக்குட்படுத்தியிருக்கின்றோம்.

அந்த வகையிலே தெல்லிப்பழை பிரதேச பிரிவிலே பலாலி வடக்கு அன்ரனிபுரம் கிராமம் அதேபோல் தையிட்டி கிராமம் அதே போல காரைநகரில் ஜே 47 கிராம சேவகர் பிரிவு அதே நேரத்தில் தற்போது நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே 103 அரசடி கிராம சேவகர் பிரிவில் ஒரு பகுதி என்பன தனி மைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரத்தில் நடமாடும் விற்பனை நிலையங்கள் ஊடாக பொது மக்களுக்கு அனைத்து கிராமங்களிலும் உணவுப்பொருட்கள் விநியோகிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நடமாடும் வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கும் செயற்பாடு பிரதேச செயலர்கள், கிராம சேவகர்கள் முன்னெடுத்துள்ளனர்.

அத்தோடு வாகனங்கள் வாகன உரிமையாளர்கள் மற்றும் அந்த வாகனத்தில் பயணிப்போர் போன்ற விபரங்களை பிரதேச செயலர் ஊடாக விண்ணப்பித்து அதனை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்தோடு பொது மக்கள் தமது அத்தியாவசிய சேவைகளை வீடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தாக இந்த செயற்பாடானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலும் பேக்கரி பொருட்கள் நடமாடும் வண்டிகள் மூலம் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றார். (ம-3,33)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



## உன்னை மறைத்துக்கொள்

❖ மனிதனிடம் உள்ள சுயநலத்தை வெளியேற்றினால், மறுபக்கம் வழியாக இறைவன் நுழைகிறான். சுயநலம் அகன்றுவிட்டால் இறைவன் மட்டுமே இதயத்தில் இருப்பான்.

❖ விக்கிரகத்தை கடவுள் என்று கூறலாம். கடவுளையே விக்கிரகமாக நினைக்கும் தவறைத் தவிர்க்க வேண்டும்.

❖ நாமே நமக்கு சொர்க்கத்தை உருவாக்கிக் கொள்கிறோம். நரகத்தில் கூட சொர்க்கத்தை உருவாக்க நம்மால் முடியும்.

❖ நாம் அன்பிற்காகக் கடவுளை அன்பு செய்ய வேண்டும். கடமைக்காகக் கடமை செய்ய வேண்டும்.

❖ நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி, பிறர் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கு உதவி செய்வது தான்.

❖ இறைவன் தன்னை நன்றாக மறைத்துக் கொண்டு, மகத்தான செயல்களில் ஈடுபடுகிறான். அதேபோல் ஒருவன் தன்னை மறைத்துக் கொண்டு (தன் செயற்பாடுகளைப் பற்றி பெருமையடிக்காமல்) செயற்பட்டால் உலகில் சாதிக்க முடியும்.

### குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு

# அடுத்த வாரம்முதல் 5,000 ரூபாய் கொடுப்பனவு

### அமைச்சர் வாசுதேவ



**(கொழும்பு)**

**எதிர்வரும் வாரம்முதல் 5000 ரூபாய் கொடுப்பனவை மீண்டும் வழங்குவதற்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

நிரந்தர வருமானம் இன்றி நாளாந்த வருமானத்தை பெறும் மக்களுக்கு இந்த கொடுப்பனவு மீண்டும் வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கொவிட் பரவலின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு நாடு முழுவதும் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளமையினால் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இம்முறை இந்த கொடுப்பனவு எவ்வளவு மக்களுக்கு வழங்கப்படும் என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. அமைச்சரவை மற்றும் உரிய பிரிவுகள் ஒன்றுக்கூடி இது தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளும்.

இந்த கொடுப்பனவினை எதிர்வரும் வாரத்திற்குள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (4-6)

# மேலும் 829 பேர் கைது

(கொழும்பு)

நேற்றுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் மாத்திரம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 829 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சரியான முறையில் முகக்கவசம் அணியாமை, மாகாண எல்லைகளை கடந்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4-6)

# மீன்வளத் துறைக்கு பாதிப்பு ஏற்பட அதிக சாத்தியம்



(கொழும்பு)

எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் என்ற கப்பலில் ஏற்பட்டுள்ள தீப்பரவல் காரணமாக மீன்வளத் துறைக்கு பாதிப்பு ஏற்படுவதற்கு அதிக சாத்தியம் காணப்படுவதாக தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் நவரத்னராஜா தெரிவித்துள்ளார்.

கப்பலில் இருந்து வெளியேறிய எரிபொருட்கள் கடலில் கலந்துள்ளமையினால் ஏற்படகூடிய அபாயம் மற்றும் கடலுணவுகளை உட்கொள்வதினால் ஏற்படும் பாதிப்பு குறித்து தற்போது வரை கிடைக்கப் பெற்றுள்ள சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பரிசோதனைளை முன்னெடுத்துள்ளோம்.

தற்போதைய நிலைமைக்கு அமைய சமுத்திரத்திற்கும், கடல் வாழ் உயிரினங்களுக்கும் ஏற்படும் பாதிப்பு குறித்து மதிப்பீடு செய்ய முடியாது. இருப்பினும் மீன்வளத்துறைக்கு பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

# பயணத்தடையால் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையும்

### என்கிறார் சுதர்ஷினி



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஜூன் 14ஆம் திகதியின் பின்னர் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையக் கூடும் என

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் 14 நாட்கள் நிறைவடைந்ததன் பின்னரே கொரோனா தொற்று பரவல் குறைவடையும் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4-6)



**கொழும்பு கடற்பரப்பில் தீப்பற்றிய எம்.வி எக்ஸ் பிரஸ் பேர்ள் எனும் சரக்கு கப்பலில் இருந்து வெளியான இரசாயனங்களால் வெள்ளவத்தை பகுதியில் விலாங்கு மீன் ஒன்று இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.**

# அதிகவிலைக்கு பொருட்கள் விற்றால் அனுமதிப்பத்திரம் ரத்து



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன இந்த விடயத்தினை ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இது தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் குறித்த வர்த்தக நிலையங்களின் அனுமதிப்பத்திரங்கள் இரத்து செய்யப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பயணக்கட்டுப்பாடு அமுல் செய்யப்பட்டுள்ள காலப்பகுதியில் கிராம சேவகர் பிரிவொன்றில் தலா 2 வர்த்தக நிலையங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (4-6)

## மொரட்டுவ மேயர் கைது

(கொழும்பு)

மொரட்டுவ நகரசபை மேயர் சமன் லால் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவையில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையின் போது, வைத்தியர் ஒருவருக்கு கடமையை செய்ய விடாது இடையூறு விளைவித்த குற்றச்சாட்டிற்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (4-6)

# கடும் காற்றினால் யாழில் வாழைச்செய்கை பாதிப்பு

(குப்பிழான்)

**யாழ். குடாநாட்டில் கடந்த நாட்களில் வீசிய பலத்த காற்றுக் காரணமாக யாழ். குடாநாட்டைச் சேர்ந்த வாழைச்செய்கை கடுமையாகப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது.**

பலத்த காற்று காரணமாக யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் பல நூற்றுக்கணக்கான வாழைமரங்கள் முறிவடைந்துள்ளன. குறிப்பாக வலிகாமம் பகுதியில் வாழைச்செய்கை கடும்பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளது. வாழைமரங்களில் அதிகமானவை பிஞ்சுக் குலைகளுடனும், வாழைப் பொத்திகளுடனும் முறிவடைந்துள்ளது. இதேவேளை, கடந்த வருட இறுதி மாத ஆரம்பத்தில் புரட்டிப் போட்ட புரேவிப் புயலால் யாழில் வாழைச் செய்கை பேரழிவைச் சந்தித்திருந்தது. இந்நிலையில் தற்போது மீண்டும் பலத்த காற்று காரணமாக வாழைச் செய்கையாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-6,18)



# யானைகளின் தொல்லையால் அவதியுறும் பூநகரி மக்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகப் பிரிவு மக்கள் யானைகளினால் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

பூநகரியின் 10ம் கட்டை தொடக்கம் முக்கொம்பன் வரையான பகுதிகளில் யானைகளின் நடமாட்டம் கூடுதலாகக் காணப்படுகின்றது. வீதியின் இரு பக்கமும் நாட்டப்பட்டிருந்த தென்னைகள் முழுமையாக யானைகளினால் அழிக்கப்பட்டுள்ளன.

கரியாலைநாகபடுவான், பல்லவராயன்கட்டு சோலைப் பகுதிகளில் யானைகளின் நடமாட்டம் கூடுதலாகக் காணப்படுகின்றன. முழங்காவில் கிராமத்திற்கும் காட்டில் இருந்து யானைகள் வருகை தந்து பயிர் அழிவுகளை ஏற்படுத்துகின்றன. பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள குடமுருட்டிக்குளம், கரியாலைநாகபடுவான் குளங்களின் கீழ் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்பயிர்களுக்கும் யானைகளினால் ஆபத்து காணப்படுகின்றது. (4-6,350)



**மகா பொறியியலாளர் தனியார் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் கடந்த புதன் கிழமை மண்கும்பான் சாட்டிமாதா தேவாலய மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்- ரவிசாந்)**

## மாற்றுத்திறனாளிகள், முதியவர்களுக்கான


# மாதாந்த கொடுப்பனவை வீடுகளில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாற்றுத் திறனாளிகள், முதியவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகளை வீடுகளில் விநியோகிப்பதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

அதற்கமைய கிராம அலுவலர்கள் மூலமாக வீடுகளில் முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு கொரோனா தொடக்கத்தில் முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், சமுர்த்தி பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் வீடுகளில் வழங்கப்பட்டன. ஆனால் தற்போது அக்கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை உள்ளது. இந்நிலையில் முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் வீடுகளில் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-6,350)

# அரச வங்கிகள் திங்கள் முதல் சேவையில்?



(முறிகண்டி)

இலங்கை வங்கி, மக்கள் வங்கி உள்ளிட்ட அரச வங்கிகள் நேற்று 11 மணி வரை மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் அனைத்து வங்கி சேவைகளையும் முன்னெடுத்தன. இதேவேளை நாளை மறுதினம் திங்கள் முதல் பகல் 1 மணி வரை சேவைகளை முன்னெடுக்க ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தபாலகம் உள்ளிட்ட சில அரச திணைக்களங்களும் மாத இறுதி பணிகளில் ஈடுபடுவதற்காக நேற்றையதினம் திறக்கப்பட்டன. (4-6,100)

# மந்தகதியில் வாய்க்கால் புனரமைப்பு; சிறுபோக நெற்செய்கை பாதிப்பு

(அக்கராயன் )

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் 2ம் கட்ட சிறுபோக நெற்செய்கைக்கு வாய்க்கால்கள் புனரமைப்பு வேலைகள் நிறைவு செய்யப்படாதன் காரணமாக சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள முடியாது இருப்பதாக விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் வன்னேரிக்குளத்தில் சிறுபோக நெற்செய்கை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வன்னேரிக்குளத்தின் வாய்க்கால்களை புனரமைக்கும் பணிகளில் நீர்ப்பாசனத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் சிறுபோக நெற்செய்கையினை இரு கட்டங்களாக மேற்கொள்வது என முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது.

1ம் கட்ட சிறுபோக நெற்செய்கை ஒரு மாதம் கடந்த நிலையில் 2ம் கட்ட சிறுபோகம் தொடங்கப்படாமல் உள்ளது. இதற்கு பிரதான காரணம் வாய்க்கால்களின் வேலைகள் நிறைவு பெறாமல் உள்ளது. வன்னேரிக்குளத்தில் போதியளவு நீர் தற்போது உள்ளது. ஆனால் சிறுபோக நெற்செய்கை தொடங்குவதற்கு நீர்ப்பாசன வாய்க்கால்கள் வேலைகள் நிறைவு பெறாதன் காரணமாக விவசாயிகள் 2ம் கட்ட வேலைகளை முன்னெடுப்பதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். (4-6,350)

## சீரற்ற காலநிலையால்

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 18 குடும்பங்கள் பாதிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீசிய கடும் காற்றினால் 18 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் பல பயன்தரு மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலக பிரிவுகளிலும் 05 நிரந்தர வீடுகளும் 13 தற்காலிக வீடுகளுமாக 18 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன

மேலும் இச் சீரற்ற காலநிலையால் 18குடும்பங்களை சேர்ந்த 58 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4-6,281)



# சிறுவர் அரங்கம்

## தேவதை கொடுத்த பரிசு

பிரகாஷும், ஜெகதீஸும் ஒருவரையொருவர் இவ்வாறு விட்டுக்கொடுக்காமல் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் திடீரென சத்தம் கேட்டது. இருவரும் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தனர்.

அங்கே கடற்கரையில் ஓர் அழகிய பெண் நடந்து வந்துகொண்டிருந்தாள்.

அந்தப் பெண்ணைப் பார்த்த மாத்திரத்தில் இருவரும் திகைப்புடன் வாயடைத்துப் போயினர்.

அந்தப் பெண் தேவதை போன்று காட்சி தந்தாள். அந்தப் பெண்ணின் முகத்தை இருவரும் உற்றுப் பார்த்தனர்.

"மீனவர்களே, என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்! நான்தான் இந்தக் கடலில் வசிக்கிற கடல் தேவதை.

நீங்கள் இருவரும் ஏதோ வழக்கு நடத்திக் கொண்டிருப்பது போன்று தெரிகிறது.

அது என்னவென்று அறிந்துகொள்ள வேண்டியே உங்கள் அருகில் வந்தேன்" என்றாள் கடல் தேவதை.

"தேவதையே! உன்னைச் சந்தித்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.



நாங்கள் இருவரும் பிடிக்கிற மீன்களை பங்கு போட்டுக் கொள்வோம். இப்போது எங்களுக்குக் குறைந்த அளவே மீன்கள் கிடைத்துள்ளன.

என் குடும்பம் வறுமையில் வாடும், அதனால் மீன்களை எடுத்துக்கொள் என்கிறான் என் நண்பன்.

"என்குடும்பத்தைப் பற்றி எனக்கு கவலையில்லை.

(தொடரும்)

# மகாபாரதம்

அருச்சுனன் அம்பு மழை பொழிந்து கௌரவர் படையை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தான்.

பீமன், துரியோதனன் மார்பில் அம்பை செலுத்தினான். இரதம் பிறிட துரியோதனன் பீஷ்மரிடம் சென்று "உண்மையில் நீங்கள் முழு பலத்தையும் காட்டி போரிடவில்லை.

இது நியாயமா? பாண்டவரிடம் நீங்கள் கருணை காட்டினால் என்னிடம்முதலிலேயே தெரிவித்திருக்கலாம்" என்றான்.




அது கேட்டு நகைத்த பீஷ்மர் "உனக்கு நான் பலமுறை சொல்லியுள்ளேன். பாண்டவர்களை யாரும் கொல்ல முடியாது.

என் ஆற்றல் முழுதும் ஆயினும் உனக்கே தருவேன்" என்று கூறி போர்க்களம் சென்று சங்கநாதம் செய்தார்.

கௌரவர் படை உற்சாகம் அடைந்தது. பாண்டவர் படையில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். அருச்சுனன் உட்பட அனைவரும் தளர்ந்து காணப்பட்டனர்.

கண்ணன் அருச்சுனனிடம் "அருச்சுனா என்னவாயிற்று உனக்கு? பீஷ்மரையும், துரோணரையும் வெல்வேன் என்றாயே அதை மறந்து விட்டாயா?" என்றார்.

உற்சாகம் அடைந்த அருச்சுனன் தனது ஒரு அம்பால் பீஷ்மரின் வில்லை முறித்தான். பீஷ்மர் வேறு அம்பை எடுத்தார்.

எட்டு திசைகளிலும் அம்புகளைச் செலுத்தி மறைத்தார்.பல அம்புகள் அருச்சுனன் மேல் பாய்ந்தன. ஆனால் அருச்சுனனின் திறமை இயல்பாய் இல்லாததை கண்ணன் உணர்ந்தார்.

பீஷ்மர்மீது கொண்ட அன்பினால் அப்படி இருப்பதாய் எண்ணிய கண்ணன் தானே பீஷ்மரைத் தாக்க எண்ணி தேரை நிறுத்தி ஆயுதம் ஏந்தி அவரை நோக்கி போனார். (தொடரும்)

## கோப்பாய் பொலிஸ் பிரிவிலும்
# ட்ரோன் கமரா கண்காணிப்பு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவில் விமானப் படையின் உதவியுடன் ட்ரோன் கமரா ஊடான கண்காணிப்பை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் இலங்கை விமானப் படையின் உதவியுடன் பயணத் தடை காலப் பகுதியில் ட்ரோன் கமராவின் உதவியுடன் தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளை மீறுவோரைக் கைது செய்யும் பணி கடந்த ஒரு வாரமாக முன்னெடுக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் மாநகரில் கடந்த இரு நாட்களுக்குமுன் கண்காணிப்புப் பணி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிலையில் கோப்பாய் பொலிஸ் பிரிவில் இந்தப் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ம-3,18,33)

# இனவாதத்தை இடைநிறுத்தி நாட்டை எம்மிடம் தாருங்கள்
## மனோ கணேசன் எம்.பி அரசுக்கு சவால்



(கொழும்பு)

இந்த நாட்டில், சிங்கள-பௌத்தர் அல்லாத எமக்கு ஜனாதிபதி, பிரதமர், முன்னரங்க அமைச்சர் ஆக முடியாது. இது உங்கள் எழுதப்படாத சட்டம். இன, மத, மொழி, சிறுபான்மை பேதங்களை, பத்து வருடங்களுக்கு இடைநிறுத்தி, நாட்டை எம்மிடம் கொடுத்து பாருங்கள். பதினொன்றாம் வருடம் தென்னாசியாவின் முன்னணி நாடாக திருப்பி தருகிறோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், சிங்கள பெரும்பான்மை அரசியல்வாதிகளை விளித்து கூறியுள்ளார்.

தனது டுவீடர் தளத்தில் மூன்று மொழிகளிலும் கருத்து வெளியிட்டுள்ள அவர் இதுபற்றி மேலும் கூறியுள்ளதாவது,

உங்கள் நண்பர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு கூட நீங்கள் பிரதமர் பதவியை தர மறுத்தீர்கள். ஜேவிபி மட்டுமே அவருக்கு பிரதமர் பதவி தர வேண்டுமென்று சொன்னது. இலங்கை, இயற்கை வளமில்லாத வள-ஏழை நாடு அல்ல. இங்கே என்ன இல்லை? இந்நாட்டை ஆளுவோரிடம் நேர்மை, தூரப்பார்வை, அர்ப்பணிப்பு, அரசியல் திடம், துணிச்சல் ஆகியவை இல்லை. குறிப்பாக, தாம் மட்டுமே இந்நாட்டின் ஏக உரிமையாளர் என எண்ணும் பெரும்பான்மை அரசியல்வாதிகளிடம் தலைமைத்துவ பண்புகள் இல்லை. இதுதான் கசப்பான “இல்லை”களின் உண்மை.

கடந்த காலங்களில் தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எமது நாட்டின் சுதந்திரம் முதல் வளர்ச்சி வரை பெரும் பங்களிப்புகளை வழங்கினார்கள். அது ஒரு பொற்காலம்.

இப்போது இந்நாடு, இலங்கை தீவு, உங்களுக்கு மட்டுமே ஏகபோக சொந்தமானது என தவறாக, இனவாத கண்ணோட்டத்தில் நீங்கள் நினைகின்றீர்கள். இந்த எண்ணம் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இரண்டிலும் உள்ளது. எல்லா பெரும்பான்மை கட்சிகளிலும் உள்ளது. இதை நான் அனுபவப்பூர்வமாக கண்டு அனுபவித்துள்ளேன் என்றுள்ளது. (ம-3)

## பயணத் தடை அமுலிலுள்ளபோது
# அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே வாகன அனுமதி
## யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன்



(யாழ்ப்பாணம்)

பயணத் தடையின் போது மிக மிக அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே வாகனங்களுக்கு அனுமதி வழங்குமாறு வடக்கு மாகாண கொரோனா தடுப்பு செயலணியில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

வடமாகாண கொரோனா செயலணியின் கூட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட மாகாண கொரோனா செயலணியினுடைய விசேட கூட்டமொன்று நேற்றுக் காலை ஆளுநர் தலைமையில் சூம் செயலி மூலம் இடம்பெற்றிருந்தது.

தற்போதுள்ள மாகாண நிலைமைகள், முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. யாழ். மாவட்ட நிலைமைகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதேபோல் வடக்கு வைத்தியசாலைகளில் உள்ள நிலைமைகள், தேவைகள், வைத்திய உபகரணங்கள் தேவைப்பாடுகள் அதேபோல ஒட்சிசன் சிலிண்டர் தேவைப்பாடுகள் மற்றும் வைத்தியசாலை வசதிகள், குறைபாடுகள் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு அதனுடைய குறைபாடு நிவர்த்தி செய்வதற்குரிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டது.

குறிப்பாக வட மாகாணத்திலிருந்து அதிகளவான வாகனங்கள் வெளியேறுவதன் காரணத்தினால் பயணத் தடை காலத்தின்போது மிக மிக அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே வாகனங்களுக்கு அனுமதி வழங்குமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவுறுத்தல் மிக விரைவில் பொது மக்களுக்கு வழங்கப்பட உள்ளது. அதே நேரத்தில் கடல் மார்க்கமாக எல்லை மீறி பிரவேசிப்பது தொடர்பிலும் இங்கே ஆராயப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார். (ம-3,18,33,101)

# நடமாடும் வியாபாரத்துக்கு அனுமதி நீடிப்பு
## அஜித் ரோஹண

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களை விநியோகிப்பதற்காக நடமாடும் வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி எதிர்வரும் ஜூன் 7ஆம் திகதி வரை செல்லுபடியாகும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ம-3)

# சுன்னாகத்தில் மதுபான விற்பனையில் ஈடுபட்டவர் கைது
## 63 மதுபான போத்தல்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் பகுதியில் மதுபான வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதுடன் 63 மதுபான போத்தல்களையும் மீட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் H.G.N.D ஜெயவீர தலைமையிலான குழுவினர் குறித்த நபரைக்கைது செய்துள்ளனர்.

பயணத் தடை அமுலில் உள்ளபோது மதுபான விற்பனைக்கு தடை செய்யப்பட்டுள்ள நிலையில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த ஒருவரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

கந்தரோடைப் பகுதியில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளார். (ம-3,18,33)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2021 இல் வெளியிடப்பட்டது.